செய்தி வெளியீடு எண். 02-2017 நாள்: 02.06.2017

விழுப்புரம் மாவட்டத்தில் 2017-18-ஆம் கல்வியாண்டு முதல் செயல்பட உள்ள அரசு சட்டக்கல்லூரி உள்ளிட்ட தமிழ்நாடு டாக்டர்.அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் இணைவிற்கு உட்பட்ட அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளிலும் சேருவதற்கான விண்ணப்பங்கள் இன்று முதல் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் வழங்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

*****

2017-2018-ஆம் கல்வியாண்டு முதல் விழுப்புரம் மாவட்டத்தில் செயல்பட உள்ள அரசு சட்டக்கல்லூரி உள்ளிட்ட தமிழ்நாடு டாக்டர். அம்பேத்கர் சட்டப் பல்கலை கழகத்தின் இணைவிற்கு உட்பட்ட அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளிலும் சேருவதற்கான விண்ணப்பப் படிவங்கள் இன்று முதல் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக தரைதளத்தில் வழங்கப்பட்டு வருகின்றது. விண்ணப்பங்களை பெற இந்தியன் வங்கியில் செலுத்து சீட்டு (Challan) மூலமாக தொகை செலுத்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

பட்டியல் வகுப்பினா் (SC/ST) ரூ.250/-ஐ செலுத்தி, சான்றிட்ட சாதி சான்றிதழை இணைத்தும், பிற வகுப்பினா் ரூ.500/-ஐ செலுத்தியும் பெற்று கொள்ளலாம். 5 ஆண்டு B.A., L.L.B., படிப்பிற்கு 02.06.2017 முதலும், 3 ஆண்டு L.L.B., படிப்பிற்கு 07.06.2017 முதலும் விண்ணப்பங்கள் வழங்கப்படுகின்றது. விண்ணப்பங்களை பெறவும், பூர்த்தி செய்த விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவும் 5 ஆண்டு B.A., L.L.B., படிப்பிற்கு 23.06.2017-ம், 3 ஆண்டு L.L.B., படிப்பிற்கு 17.07.2017-ம் இறுதி நாளாகும். மேலும் விவரங்களுக்கு www.tndalu.ac.in என்ற இணையதளத்தை பார்க்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.